Registered as a Newspaper

A/L 86
காவிகள்
செவ்வாய், வியாழன்
நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 3—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

A/L 86
நுண்கணிதம்
(பிரயோகம் மட்டும்)
புதன், வெள்ளி
நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 2—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு பங்குனி மீ 12 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப் பிறை 13 (25 03 1986) UTHAYAN - A LVELY TAMIL DAILY கதிர்:109

- தமிழரின் சட்டபூர்வ உரிமையை வழங்கவேண்டும்
- யுத்த நிறுத்தம் இரு பக்கங்களிலும் தேவை

# தமிழரை கொல்வதை நிறுத்தி நேரடிப் பேச்சுக்கு இலங்கை தயாராக வேண்டும்

## இந்திய நாடாளுமன்றத்தில் அமைச்சர் பகத் உரை

புதுடில்லி, மார்ச் 24

இலங்கை அரசு தமிழர்களைக் கொல்வதை நிறுத்த வேண்டும்.

தமிழரின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்; அவர்களின் சட்டபூர்வமான உரிமைகள் கொடுக்கப்பட்டாக வேண்டும்.

இப்படி வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று (திங்கட்கிழமை) பேசுகையில் குறிப்பிட்டார்

வெளிநாட்டு அமைச்சக்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தை அவர் முடித்து வைத்துப் பேசினார்.

அமைச்சர் பகத் சொன்னதாவது;

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவதை இலங்கை அரசு நிறுத்த வேண்டும். அப்படி ஒரு தீர்வு இருக்க முடியாது

தமிழரின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் அவர்களின் சட்டபூர்வமான உரிமைகள் கொடுக்கப்பட்டே ஆக வேண்டும்.

ஐ நா. மனித உரிமைக் கமிஷன் முன்னால், மனித உரிமைகளை மீறுவதற்காக இலங்கை உலக நாடுகளினால் பலமாகக் கண்டிக்கப்பட்டது. அரச படைகளால் அப்பாவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

வழிக்கு வரும் வரை

# இலங்கையுடன் இந்தியா "தொடர்பற்ற நிலையில்"

புதுடில்லி, மார்ச் 24

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படும் வரை இந்திய அரசு, இலங்கையுடன் ஒரு 'தொடர்பற்ற நிலை'யைக் கடைப்பிடிக்க இருப்பதாக தெரியவருகின்றது.

இலங்கையில் வகை தொகை இன்றி அப்பாவித் தமிழ் மக்கள் தினமும் கொல்லப்பட்டு வருகின்றார்கள்.

இது நிறுத்தப்பட்டால் தான் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடிய சூழ் நிலை உருவாகும் - இப்படி இந்திய அரசு அடிக்கடி கூறிவருகிறது.

அப்பாவித் தமிழர் மீதான வன்செயல்களில் இனக் கொலையின் சாயல் தெரிகிறது என்று இந்தியா, தனது நாடாளுமன்றத்திலும் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணைக் குழுவிலும் சுட்டிக்காட்டியதும் தெரிந்ததே.

இந்த நிலையில் கொழும்பில் இருந்து டில்லி திரும்பிய இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரட்ன, பிரதமரைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**
25- 3- 1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.45 முதல் 12 15 வரை
ராகுகாலம்:
3.15 முதல் 4 45 வரை
இன்று பகலும் இரவும் பொருந்தும்
பங்குனி உத்தரம்
பூரணை விரதம்

# நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு 15 லட்சம் ரூபா

கொழும்பு, மார்ச் 25

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் ஏற்பட்ட சேதத்தை ஈடு செய்யும் வகையில் 15 லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன

கடந்த 3 ஆம் திகதி நயினாதீவில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் 2 தேர்கள், மஞ்சம், சப்பரம், கோயில் முன்கதவு ஆகியவை தீயினால் சேதமாகின என்பது தெரிந்ததே.

# கோட்டைக்கு வெளியே சிப்பாய்கள் வந்தபோது நகரில் பதற்றம்

நல்லூர், மார்ச் 25

யாழ். கோட்டைக்கு வெளியே நேற்று சிப்பாய்கள் வந்ததால் நகரில் பதற்றம் நிலவியது. மக்கள் ஓடினார்கள். வாகனங்களும் ஓடின. நகரம் வெறிச்சோடியது.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் இச் சம்பவம் நடந்தது. கவச வாகனங்களில் பண்ணையில் உள்ள பழைய இறைச்சிக் கடை வரை சிப்பாய்கள் வந்திருந்தனர்.

சிலர் அங்குள்ள கட்டடங்களுக்குள் மறைந்து நின்றனர். சிலர் புற்றரையில் படுத்திருந்தனர்.

இதனால் தீவுப்பகுதிக்கான போக்குவரத்துகள் சிலமணி நேரம் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதே வேளை நேற்றுக் காலை ஏழு மணி அளவில் யாழ் கடற்கரை வீதியில் நின்றவர்கள் சென்றிக்கு நின்ற சிப்பாய்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

இச் சம்பவத்தினால் காயமடைந்தவர்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. சம்பவத்தில் சிலர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## தாதிகள் சத்தியாக்கிரகம்

கொழும்பு, மார்ச் 25

வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் தாதிகள், ஐக்கிய தாதிமார்கள் சங்கப்பணிமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து சத்தியாக்கிரகம் செய்து வருகின்றனர்.

சங்கப் பணிமனை நாரஹென்பிட்டியில் உள்ளது.

## கடலிலிருந்து தாக்குதல்

வல்வெட்டித்துறை, மார்ச் 25

ஞாயிறு இரவு கடலில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதேசமயம் தொண்டைமானாறு இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன

வல்வெட்டித்துறை, தொண்டமானாறு இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் இருந்து ஏற்கனவே குடிமக்கள் வெளியேறி இருந்ததால் தாக்குதல்களின் போது வெறுமனே இருந்த வீடுகளே சேதம் அடைந்தன.

அதிகாலை விமானம் ஒன்று இப்பகுதியில் வட்டமிட்டுத் திரிந்ததால் மக்கள் பதற்றம் அடைந்தனர்.



உவைக்கு எப்பிடிக் குடுத்தாலும் சூடு, சொறணை வரும் எண்டு எனக்கெண்டா நம்பிக்கையில்லை....!

## எழுத்தாளர் டானியல் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 25

ஈழத்தின் பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. கே. டானியல் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழகத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வான தாக்குதல் தொடர்ந்தும் இடை நிறுத்தம்

கொழும்பு மார்ச் 25

வான்த் தாக்குதல் இடைநிறுத்தம் மறு அறிவித்தல் வரை தொடரும் இது மிகவும் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து உதயனுக்குத் தெரியவந்துள்ளது.

வான்த் தாக்குதல் இடைநிறுத்தத்தை ரத்து செய்வதா? அல்லது தொடர்வதா? என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இன்று ஆராய்ந்தன என்றும் தெரியவந்தது

எனினும் வானத்தாக்குதல் இடை நிறுத்தத்தை ரத்துச் செய்வது பற்றி எப்போது தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்பது பற்றி இப்போது சொல்ல முடியாது என்று அதே அமைச்சு வட்டாரங்கள் கூறியதாக அறியப்படுகிறது.

வானத் தாக்குதல் இடைநிறுத்தம் இம் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்தது தெரிந்ததே.

## டில்லியில் கூட்டணி நிரந்தரப் பிரதிநிதி

சென்னை மார்ச் 24

புதுடில்லியில் தங்கியிருந்து இலங்கைத் தமிழரின் பிரச்சினைகள் பற்றி நேரடியாகக் கவனிக்க ஒரு பிரதிநிதியை நியமிப்பது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு எடுத்துள்ளது

கூட்டணியின் டில்லிப் பிரதிநிதி, அரசு வட்டாரங்களுடன் நெருங்கிய தொடர்பு வைப்பது, பத்திரிகைகளுடன் தொடர்பு வைப்பது, வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு இலங்கைத் தமிழரின் உண்மை நிலையை தெரிவிப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவார்.

டில்லிப் பிரதிநிதியாக திரு கரிகாலன் அல்லது திரு வி. பொன்னம்பலம் ஆகியோரில் ஒருவரை நியமிப்பது என்று கூட்டணி எண்ணி இருந்தது.

கரிகாலன் ஆசிரியர் பதவியைத் துறந்து சீஷெல்ஸ் நாட்டில் அரசு உத்தியோகம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு சென்று விட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பண்ணைக்கடலில் மீனவர் மீது சூடு! ஆறுபேர் அருந்தப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

பண்ணைக்கடலில் மீன் பிடிக்கப் படகில் சென்ற ஆறு மீனவர்கள் மீது கோட்டை முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகச் சொல்லப் படுகிறது.

நேற்றுக் காலை 8 30 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மீன்பிடிப்படகு சேதம் அடைந்தது.

மீனவர்கள் கடலினுள் பாய்ந்து தெய்வாதீனமாக உயிர் தப்பினர்

உயிர் தப்பிய நாவாந்துறை, நவாலியைச் சேர்ந்த மீனவர்கள் விவரம் வருமாறு; சுவாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, அன்ரனி சு நீக்கிலஸ்பிள்ளை, ஆ. கலப்பு, தி, யோகம்

## அரசியல் குழுவில் புதிதாக இருவர்

சென்னை, மார்ச் 24

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழுவில் இரண்டு உறுப்பினர்கள் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

மூதூர் முன்னாள் எம். பி திரு. அ தங்கத்துரை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலைக் கிளைப் பிரமுகரான திரு. செ. ஈழத்துநாதன் ஆகியோரே புதிய உறுப்பினர்கள்.

இதைத் தவிர கூட்டணியின் அரசியல் குழுவில் (பொலிற்பீரோ) வேறு மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் கூறின.

கூட்டணி அரசியல் குழுவுக்கு ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏழு உறுப்பினர்கள் வருமாறு;

1. திரு. அ. அமிர்தலிங்கம்
2. திரு எம். சிவசிதம்பரம்
3. திரு. இரா. சம்பந்தன்
4. திரு. தா சிவசிதம்பரம்
5. மாவை சேனாதிராசா
6. காசி. ஆனந்தன்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சந்நிதியில் பூஜை நிறுத்தம்; அயலில் இரண்டு சடலங்கள்

## இணைப்பதிகாரி -- பூசகர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

கடந்த வெள்ளிக் கிழமை செல்லச் சந்நிதி ஆலயச் சுற்றாடலில் நடந்த தாக்குதலில் மரணமான இருவரின் சடலங்கள் அங்கே அப்படியே கிடக்கின்றன

இதனால் கோயிலில் பூசைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்தில் ஒருநேரப் பூஜையாவது நடத்த அனுமதிக்கும்படி இராணுவ இணைப்பதிகாரியைக் கோருவதற்காக ஆலயப் பூசகர்கள் குழு ஒன்று இன்று பலாலி முகாமிற்குச் செல்கிறது

கடந்த வெள்ளிக் கிழமை ஆலய சுற்றாடலில் நடந்த தாக்குதலில் மூன்றுபேர் மரணமானார்கள் என்பது தெரிந்ததே

ஒருவரின் பிரேதம் அகற்றப்பட்டு விட்டது. சுற்றாடலில் கிடக்கும் ஏனைய 2 சடலங்களையும் அகற்றிய பின்னரே ஆலயத்தில் மீண்டும் பூஜைகளை ஆரம்பிக்க முடியும்.

இதைக் கருத்திற் கொண்டு ஆலயப் பூசகர் கடந்த சனிக்கிழமை மாலை ஆலய மணியை அடித்துப் பக்தர்களை அழைக்க முயற்சித்தார்.

ஆலய மணி ஓசை கேட்டதுதான் தாமதம்;

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆரையம்பதி, காத்தான்குடியில் தொடர்ந்து நேற்றும் பதற்றம்

மட்டக்களப்பு, மார்ச் 25

முஸ்லிம், தமிழர் மாறி மாறிக் கடத்தப்பட்டதால் ஏற்பட்ட பதற்ற நிலை காத்தான்குடி—ஆரையம்பகுதியில் நேற்றும் நீடித்தது

பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு தமிழ் பயணிகள் தாக்கப்பட்டனர். துப்பாக்கிக்குண்டு தாக்கி ஒரு தமிழர் படுகாயம் அடைந்தார்.

இதுபற்றிய விவரங்கள் வருமாறு:-

காத்தான்குடி - மஞ்சத்தொடுவாய் பகுதியில் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் ஊர்காவல் படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

இதன் எதிரொலியாக எல்லைப் புறமான மஞ்சத்தொடுவாய்ப் பகுதியில் வாழ்ந்து வந்த தமிழர்கள் பீதி அடைந்து வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்தனர்.

காத்தான்குடி - ஆரையம்பதி எல்லையில் உள்ள ரேடியோ திருத்தும் கடை ஒன்றை அதன் உரிமையாளர் நேற்றுக் காலை திறந்து கொண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதிக்கான அரச படகுச் சேவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

தீவுப்பகுதிகளுக்கு இடையேயான அரசாங்கத்துக்குச் சொந்தமான பிரயாணப் படகுச் சேவை நாளை (புதன்கிழமை)யில் இருந்து மீண்டும் ஆரம்பமாகின்றது பாதுகாப்புப் படையின் அங்கீகாரம் பெற்ற அந்த நேரசூசி அட்டவணை வருமாறு;

| புறப்படும் நேரம் | சேரும் நேரம் |
|---|---|
| நெடுந்தீவு காலை 7 மணி | நயினாதீவு காலை 8-10 |
| நயினாதீவு காலை 8-20 | குறிகாட்டுவான் காலை 8-30 |
| குறிகாட்டுவான் காலை 9-30 | நயினாதீவு காலை 9-45 |
| நயினாதீவு காலை 10 00 | அனலைதீவு காலை 11-00 |
| அனலைதீவு நண்பகல் 12-00 | நயினாதீவு பி. ப. 1-00 |
| நயினாதீவு பிற்பகல் 1-15 | குறிகாட்டுவான் பி ப. 1-30 |
| குறிகாட்டுவான் பி. ப. 1-45 | நயினாதீவு பி. ப. 2-45 |
| நயினாதீவு பி. ப. 3-00 | நெடுந்தீவு மாலை 4-15 |

எழுவைதீவு வாசிகள் தனிப்பட்ட படகுகள் மூலம் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று அரச படகுச் சேவையைப் பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

# நாவற்குழியில் நேரடி மோதல் ஷெல் தாக்குதல்கள்

— கைதடிச் செய்தியாளர் —

கைதடி, மார்ச் 25

நாவற்குழியில் நேற்று போராளிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நேரடி மோதல் ஏற்பட்டது. இதனை அடுத்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒருவர் காயம் அடைந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

நேற்றுக் காலை 1.30 மணி அளவில் நாவற்குழி இராணுவமுகாமிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் நாவற்குழிச் சந்தியை நோக்கி வர முற்பட்டனர்.

முகாமிலிருந்து ஏறக்குறைய 400 மீற்றர் தூரத்தில் போராளிகள் அவர்களை எதிர்கொண்டனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நேரடி மோதல் இடம் பெற்றது.

கைக்குண்டுகள், துப்பாக்கிகள் என்பன பாவிக்கப்பட்டன சிறிது நேரத்தில் சிப்பாய்கள் முகாமை நோக்கி திரும்பி விட்டனர். போராளிகள் தரப்பில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது. சிப்பாய்கள் தரப்பில் ஏற்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## இயக்குநர் நீலகண்டனின் அனுபவம் பேசுகிறது

தினசரி சினிமா

தமிழ்த் திரையுலகின் பழம் பெரும் இயக்குநர்களில் ப.நீலகண்டனும் ஒருவர். புரட்சித் திலகம் எம்.ஜி.ஆர்: நடிகர்திலகம் சிவாஜி கணேசன் போன்றவர்களின் வெற்றிப் படங்களை இயக்கியவர் அவர்.

அவர் தமது 'அந்த நாள் ஞாபக'த்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பற்றிச் சொல்கிறார்.

'பராசக்தி'யில் அற்புத நடிகராக அறிமுகமான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் "கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி" படத்தில் நகைச்சுவை நடிப்பு ஆற்றலை வெளிப்படுத்தி எல்லோரையும் கவர்ந்தார்.

"அண்ணே! இந்தப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன் போன்ற அனுபவ முத்திரை பெற்ற நகைச்சுவை நடிகரோடு என்னை நடிக்க வைக்கிறீர்கள். ஆகையினால் நான் எப்படி நடிக்க வேண்டும் என்று மனம் விட்டுச் சொல்லிக் கொடுங்கள். கூச்சம் இல்லாமல் திருத்துங்கள்" என்று சிவாஜி கணேசன் என்னிடம் சொன்ன பெருந்தன்மையை இன்னும் மறக்கவில்லை.

அவர் நடித்த 'முதல் தேதி'யில் முற்றிலும் மாறுபட்ட பாத்திரம் என்றார். பல குழந்தைகளின் ஏழைத் தந்தையாக நடித்த பொழுது கூட அவர் பாத்திரத்தின் பண்புக்கு முக்கியத்துவம் கொடுத்தாரே தவிர, 'இப்படி வயதான பாத்திரத்தில் நடிக்க மாட்டேன்.' என்று சொல்லவில்லை.

பிற்காலத்தில் நடிகர் திலகம் தொண்டு கிழவர் வேடத்தில் அப்பர் சுவாமிகளாக நடித்த அற்புதத்தையும் கண்டோம்.

நடிகர் என்றால் எத்தனையோ பாத்திரத்தையும் ஏற்று நடிக்க வேண்டும் என்ற உயர்ந்த மனப்பண்பினால்தான் சிவாஜி கணேசன் நடிப்பின் சிகரத்தில் ஏறி நிற்கின்றார்" என்றார்.

அவர் திரைப்பட வளர்ச்சி குறித்துக் குறிப்பிடுகையில்,

'நம்நாட்டில் திரைப்படக் கல்லூரிகள் சில இயங்கி வருவதால் தரமான திறமையான கலைஞர்கள் தோன்றிக் கொண்டேப் இருபார்கள் என்பது திண்ணம் என்றார்.

# லிபிய கடல் எல்லையில்
# அமெரிக்க இராணுவ ஒத்திகை
## கேர்ணல் கடாபி கண்டனம்

திரிப்போலி, மார்ச் 24

அமெரிக்க கடற்படையின் 6 வது பிரிவு லிபியாவை அடுத்து உள்ள மத்திய தரைகடற் பகுதிகளில் தனது நடமாட்டத்தை அதிகரித்துள்ளது. இது ஆத்திரமூட்டக் கூடியதொரு அத்து மீறல் நடவடிக்கையாகும்.

இவ்வாறு லிபியத் தலைவர் கேர்ணல் கடாபி அமெரிக்காவைக் கண்டித்துள்ளார்.

அவர் இந்த நடவடிக்கை பற்றி மேலும் தெரிவிக்கையில்;

இந்தப் பிராந்தியத்தில் ஆகாயப் பகுதிகளிலும் கடற் பகுதிகளிலும் அமெரிக்கா தனது இராணுவ ஒத்திகைகளை மேற்கொண்டுள்ளது.

இது லிபியாவின் சுதந்திரத்துக்கு பெரியதொரு அச்சுறுத்தலாகும்

அமெரிக்கா லிபியாவின் சுதந்திரத்தையும், கடல் எல்லை உரிமைகளையும் தொடர்ந்து உதாசீனம் செய்து கொண்டே வருகிறது.

இந்த நடவடிக்கைகளை லிபியா தொடர்ந்து சகித்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு கடாபி ஆத்திரத்தை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கடற்படைக் கப்பல்கள் கடந்த சில தினங்களாக மத்திய தரைக்கடற் பகுதிகளிலும் இந்து சமுத்திரப்பிராந்திய கடல்களிலும் ஆங்காங்கு நடமாடுவது அக்கறையுடன் அவதானிக்கப்பட்டு வருகிறது.

## பஞ்சாப்பில் வன்முறை

சண்டிகார், மார்ச் 24

பஞ்சாப்மாநில அமிர்தசரஸ் நகரில் இருந்து பட்டாலா நோக்கிகாரில் சென்ற 3பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் ஒருவரை கொலையாளிகள் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஞ்சாப்பின் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களே இந்தக் கொலைகளைச் செய்ததாக நம்பப்படுகிறது.

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்த பொழுது உணவுப் பொருள்களை எடுத்துச் சென்ற பயணத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பங்களாதேஷில்

## 19 அமைச்சர்கள் பதவி விலகல்
### எதிராளிகளைக் கவர எர்ஷாட் நடவடிக்கை

டாக்கா, மார்ச் 24

பங்களாதேஷில் ஜனாதிபதி எர்ஷாட்டின் அமைச்சரவையில் 19 அமைச்சர்கள் பதவி விலகிக் கொண்டுள்ளனர்.

இவர்களின் பதவி விலகல் கடிதங்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தேர்தலில் எதிர் அணிகளைக் கலந்து கொள்ளத் தூண்டும் அடுத்த நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இராணுவ நீதிமன்றங்களும் மேலும் வேறு சில இராணுவக் கட்டுப்பாட்டு அமைப்புகளும் அகற்றப்பட்டுவிட்டதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

பங்களாதேஷ் பொதுத் தேர்தல் வருகிற மே மாதம் 7-ம் திகதி நடைபெறும் என எர்ஷாட் வலியுறுத்தி வருகிறார்

இராணுவச்சட்டத்தை நீக்கிவிடவேண்டும் எனவும் எர்ஷாட் பதவி துறக்க வேண்டும் எனவும் எதிராளிகள் பலர் இன்னும் வலியுறுத்திக் கொண்டேன் வருகிறன

## பனிக் கண்டத்தில் பாரத விஞ்ஞானிகள்
### 4 மாதம் தங்கியிருந்த குழு கோவா மீண்டது

புதுடில்லி, மார்ச் 24

அண்டாக்டிக் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சென்ற விஞ்ஞானிகள் குழு கோவாவை வந்தடைந்துள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் மாதம் தமது பயணத்தை ஆரம்பித்த இந்தக் குழுவினர் தொடர்ந்து 4 மாதங்கள் அங்கு தங்கி ஆய்வுகளை மேற்கொண்டனர்.

மூடி அடர்ந்த பனிப் படிவம் பிரதேசங்களில் தமது முகாம்களை அமைத்து அவர்கள் தமது ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பூகம்பவியலாளர்களும் தொடர்புள்ள துறைகளுக்கான விஞ்ஞானிவுள் பலரும் இந்த ஆய்க்க் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

பாகிஸ்தானில்

## சிறைக்கூடம் உடைக்கப்பட்டது
### 34 மரண தண்டனைக் கைதிகள் தப்பி ஓட்டம்

காரச்சி, மார்ச் 24

பாகிஸ்தான் சுக்கூர் சிறைக்கூடத்தை உடைத்துக் கொண்டு 34 மரண தண்டனைக் கைதிகள் தப்பி ஓடிவிட்டனர்.

சிறைகூடத்தைக் நோக்கி வெளியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சண்டையை அடுத்தே இவ்வாறு கைதிகள் தப்பிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில்போது சிறைக்கூடக் காப்பாளர் ஒருவரும் ஒரு கைதியும் மரணமடைந்தனர். பலர் காயமடைந்தனர்.

தாக்குதலுக்கு இலக்கான சிறைக்கூடம் பலத்த பாதுகாப்புடன் இருந்ததாகவும் மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பி வேலியும் மேலதிக அரணும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோடிய கைதிகளைத் தேடும் நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் பொலிஸ் பிரிவு தீவிரப் படுத்தியுள்ளது

## பாரத விமானத்தைக் காணவில்லை
### ஜம்மு-கஷ்மீர் பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை

புதுடில்லி, மார்ச்.24

ஜம்மு-கஷ்மீர் பகுதியில் பாரத போக்குவரத்து விமானமொன்று காணாமல் போய்விட்டது.

15 இராணுவத் துருப்புகளும் 4 சிப்பந்திகளும் இந்த விமானத்தல் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது.

பனிமூடிய மலைப் பிரந்தியத்தில் இது பயணம் மேற் கொண்டிருந்ததால் அந்தப் பகுதிகளில் எங்காவது மோதி விழுந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

விமானத்தைத் தேடும் முயற்சியில் ஹெலிக்கொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பனி அடர்ந்து காணப்படுவதால் தரைமார்க்கத் தேடுதல் கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ. நாடுகள் அலுவலக பிரதிநிதிகள் நியமனம்
### அமெரிக்க முடிவு மாற்றத்துக்கு செக்கோஸ்லவேகியா கண்டனம்

நியூயோர்க் மார்ச்.24

ஐ. நா. அலுவலகங்களில் அந்தந்த நாடுகளின் பிரதி நிதிகள் தொகையை அதிகரிப்பது என்ற முடிவைக் கட்டுப்படுத்த அமெரிக்கா கருதியுள்ளது

அமெரிக்காவின் இந்தப் போக்கை செக்கோஸ்லவேகியா கண்டித்து கண்டனக் குறிப்பொன்றையும் ஐ. நா. அலுவலகத்தில் கையளித்துள்ளது.

ஐ நாவிலுள்ள தனது அலுவலகத்தில் எத்தனை பிரதி நிதிகளை வைத்திருப்பது என்ற முடிவை அமெரிக்கா அல்ல செக்கோஸ்லவேகியா தான் தீர்மானிக்க வேண்டும்

இவ்வாறு நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. அலுவலகத்தில் கையளிக்கப்பட்ட கண்டனக் குறிப்பில் செக்கோஸ்லவேகியா தெரிவித்துள்ளது.

பாரத விடுதலை வேள்வியில்

## பகத்சிங், ராஜகுரு, கபில்தேவ்
### பஞ்சாப்பில் 1 லட்சம் மக்கள் திரண்டு நினைவு அஞ்சலி

புதுடில்லி, மார்ச்.24

பாரத விடுதலையில் தீவிரமாக உழைத்த பகத்சிங் ராஜகுரு, கபில்தேவ் ஆகியோரின் நினைவுதினம் கொண்டாடப்பட்டது

பஞ்சாப் மாநிலத்தில் ஒருலட்சம் மக்கள் திரண்டு மேற்படி தியாகத் தலைவர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லி அகில பாரத தேசிய சங்கம் ஏற்பாடு செய்திருந்த அஞ்சலிக் கூட்டத்தில் பேராசிரியர் எம் ஜி. ரங்காவும் இன்னும் பல தேசியத் தலைவர்களும் உரையாற்றினர்.

வீர வேங்கைகளாக விளங்கிய மேற்கூறிய விடுதலைத் தலைவர்களின் தாயகப்பணியை அவர்கள் தமது உரைகளில் விளக்கியதாக செய்திகள் தெரிவித்தன

## முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வேண்டும்
### தம்பிமுத்து கேட்கிறார்

மட்டக்களப்பு, மார்ச் 25

தமிழ் பகுதிகளில் இருந்து வெளியேறிய முஸ்லிம் குடும்பங்கள் மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்தப்படும் போது அப்பகுதி வாழ் தமிழ் குடும்பங்கள் முஸ்லிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரனி சாம் தம்பிமுத்து மட்டக்களப்பு தென்பகுதியில் நடைபெற்ற சமாதான கூட்டமொன்றில் உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை தென் பகுதி மக்களிடையே சமாதானம் ஐக்கியம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் அரசாங்க அதிபர் திரு எம் அந்தோனிமுத்து தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் முஸ்லிம் பிரமுகர்கள் கிரமோதய தலைவர்கள் உட்பட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழர்களாகிய நாம் இன்று எமக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென போராடுகின்றோம். இத்தகைய போராட்டத்தை முஸ்லிம்கள் எம்மீது நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாக நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

நாம் மற்றவர்களை நீதியாக நடத்தினால் தான் மற்றவர்களிடமிருந்து நீதியை எம்மால் பெற முடியும் என்றார்.

மட்டக்களப்பு இரண்டாவது எம்.பி ஜனாப் அகமட் ரிஸ்வி சின்ன லெப்பை உரையாற்றுகையில்:

எமது பகுதி தமிழ்—முஸ்லிம் ஐக்கியத்தை சீர்குலைப்பதற்காக உருவான சமூக மோதல் எதிர் காலத்தில் ஏற்பட நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றார்.

கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர் நாயகம் அல்ஹாஜ் எ. அகமட் லெப்பை தனதுரையில்

எமது பகுதியிலுள்ள இனங்களிடையே இருவகை பாதிப்பு ஒன்று தற்போதைய இனப் பிரச்சினை மற்றது சமூக மோதல்.

தமிழ் பகுதியிலுள்ள முஸ்லிம் குடும்பங்கள் இன்று குடியேற மறுப்பதற்கும் இனப்பிரச்சினை போராட்டத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. சமூக மோதல் ஏற்பட்டதை அடுத்து நிலவுகின்ற பயம் பீதி இதற்கு காரணம் என்றார்.

**மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்**

# கரணவாயில் கொள்ளையர் மீண்டும் கைவரிசை!
### ஒரே இரவில் 4 வீடுகள் சூறை

கரவெட்டி மார்ச் 25

வடமராட்சியில் மீண்டும் கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன.

இம்முறை ஒரே நாளில் நான்கு வீடுகளில் கொள்ளைகள் நடத்தப்பட்டன.

கரணவாய் வடக்கில் இந்தச் சம்பவங்கள் நடந்தன

திரு.சிவபாதம்(எஸ்பி.) திரு. ஏ. சரவணமுத்சு, திரு. க குணரத்தினம், திரு. எஸ். வி நாகமுத்து ஆகியோரின் வீடுகளே கொள்ளை நடத்தப்பட்ட வீடுகள் ஆகும்.

இக் கொள்ளைகள் அனைத்தும் கடந்தசனிக்கிழமை நடந்தன.

திரு சிவபாதத்தின் வீட்டுக்குள் இரவு 12.30 மணியளவில் சுமார் 20 இளைஞர்கள் நவீன ரக துப்பாக்கிகளுடன் நுழைந்தனர். ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகை ஒரு வைர மோதிரம் உட்பட, இந்திய நாணயம் 1400 ரூபா ஆகியவற்றை இவர்கள் அபகரித்தனர். அங்கிருந்த த. பொன்னையா என்பவரிடம் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகை, 2500 ரூபா பணம், ரேடியோ, மூன்றுகைக்கடிகாரங்கள் என்பன வற்றையும் இவர்கள் அபகரித்துக் கொண்டனர்.

இதனை அடுத்து திரு. சரவணமுத்து, திரு. குணரத்தினம், திரு நாகமுத்து என்பவர்களுடைய வீடுகள் ஒரே நேரத்தில் சுற்றி வளைக்கப்பட்டன 2 மணித்தியாலங்கள் தேடுதல் நடத்தப்பட்டது.

திரு.சரவணமுத்துவின் வீட்டில் திருமதி. சரவணமுத்துவை (55 வயது) துப்பாக்கி பிடிகளாலும், சப்பாத்து,கால்களாலும்தாக்கினர்.

அவருடைய மகளையும் தாக்கினர். தோடு 2 லட்சம் ரூபா பெறுமதியான நகை, ரிவீ, டெக், ரேடியோ என்பன கொள்ளையிடப்பட்டன. திரு சரவணமுத்து ஓர் வியாபாரி.

திரு குணரத்தினம் வீட்டில்ஒருதாலிக்கொடி அபகரிக்கப்பட்டது "உனது வீட்டில் வேறு ஒன்றும் இல்லை. தாலிக் கொடியைத்தா" என்று கொள்ளையர் கேட்டனராம். திரு. குணரத்தினம் ஓர் அரச ஊழியர்.

திரு. நாகமுத்து வீட்டில் தளபாடங்கள் சேதமாக்கப்பட்டன இளம் பெண்கள்உட்பட வீட்டுக்காரரை வயரால் தாக்கினர்.

தாக்கியபின் 15 பவுண் நகை, பணமாக 1000 (ரூபா) (வயல் வேலைக்காக வைத்திருந்த பணம்) கொள்ளையிடப்பட்டது.

திரு. நாகமுத்து ஓர் விவசாயி.

கொள்ளையர்கள் சென்றுசில நிமிடங்களின் பின் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

இச்சம்பவங்கள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தி உள்ளன.

## பயன்மிகு வளர்ச்சி பாடசாலைகளில் வேண்டும்
### அர்ச் அந்தோனியார் பாடசாலை அதிபர் கூறுகிறார்

பரந்தன், மார்ச் 24

பாடசாலைகளின் பயனுள்ள வளர்ச்சிக்கு கல்வித் திணைக்கள ஒத்துழைப்புடன் பெற்றோரின் பங்களிப்பும் பாடசாலை நலன் விரும்பிகளின் அக்கறையும் மிக வேண்டியதாகும்.

இவ்வாறு முரசுமோட்டை அர்ச் அந்தோனியார் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய பாடசாலை அதிபர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், பிள்ளைகளின் தேவைக்கேற்ற அளவுக்கு வகுப்பறை, கட்டட வசதிகள் போதாது, தளபாட வசதிகளும் மிகக் குறைவாகவே இருக்கின்றது. குடிதண்ணீர் பெறுவதற்கும் பெரும்பாலும் சிறிய மாணவர் பாடசாலை [illegible] கடந்து போய்தான் வரவேண்டியுள்ளது. இவ்வாறு அதிபர் பல குறைபாடுகளையும் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க நடப்பு வருட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர்; தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்:-திரு க பூலோகேந்திரன் அதிபர்

செயலாளர்:- திரு க. இராசரத்தினம்

பொருளாளர்:-திருமதி சிவராஜசிங்கம் ஆசிரியை

மற்றும் 7 உறுப்பினர் கொண்ட செயற் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

சங்கம் தனது தீர்மானத்தில்; பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளரைக் கண்டு பேசுவதெனவும் பாடசாலைக்கும் அவரை அழைத்து நிலைமைகளை நேரில் விளக்குவதெனவும் தீர்மானித்துள்ளது.


ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி ரிலியற் விஜயரெட்டிணம்

தோற்றம்: 31 - 01 - 1949 மறைவு: 25 - 03 - 1985

ஆருத்துயரில் எமையெல்லாம் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு விண்ணுலகம் சென்றனையே. ஓராண்டு சென்றாலும் உன் நினைவு மாளவில்லை ஆண்டு பல சென்றாலும் மீண்டும் நீர் பிறந்து வந்து எம் துயர் தன்னில் தீராயோ.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுவோம்.

உமது பிரிவால் துயருறும்,

தாயார்,

கணவன்: விஜயரெட்டிணம்,

பிள்ளைகள்:

விஜேஷ், சுகி, சுபோ, அனிட்டா.

சகோதரர்கள்:

றிச்சட்.

மேற்கு ஜேர்மனி – றெஜி, குமார், அரியட்.

மைத்துனர்கள்:

பெரியவிளான் – ஜெயரட்டிணம், அழகரெட்டிணம்

வட்டக்கச்சி – குணரெட்டிணம்.

மேற்கு ஜெர்மனி – பாலரெட்டிணம்,

,, துரைரெட்டிணம்,

,, நவரெட்டிணம்.

மாமி; க. அன்னம்மா

மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

பெரியவிளான்,
இளவாலை.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

காற்றுள்ள போதே நாம் தூற்றிக் கொள்வோம்; கனமான குருவை எதிர் கண்ட போதே மாற்றான அகந்தையினைத் துடைத்துக் கொள்வோம்.

மகாகவி பாரதியார்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 25-03-86 தொலைபேசி: 24805 22073 த. பெ. 28

## முளையிலே கிள்ளுங்கள்

மட்டக்களப்பில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்ற நிலை தோன்றி உள்ளது. இரு சமூகங்களுக்கும் இடையில் வேண்டாத குழப்பங்களை உண்டாக்குவதற்கான சூழ்நிலைக்குக் கருக்கட்டி வருகிறது இது மிகவும் கவலையும், விசனமும் அளிப்பதாகும்

ஒரு சில தனிப்பட்டவர்களுக்கு இடையேயான பகைமையைப் பெரிதாக்கி, இரு சகோதரர்களையும் மோத வைக்கும் முயற்சி அங்கு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். மட்டக்களப்பில் என்ன யாழ்ப்பாணத்தில் என்ன தமிழ் - முஸ்லிம் மக்கள் சகோதரர்களைப் போல ஒட்டுறவுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவர்களை எப்படியாவது பிரித்து மோத வைத்துத் தமது நோக்கத்தை எய்துவதற்குத் தீய சக்திகள் காத்து நிற்கின்றன. அதற்குச் செயல் வடிவம் கொடுக்கவும் முயன்று வருகின்றன.

முன்னர் — சில மாதங்களுக்கு முன்னர்— அந்தத் தீய சக்திகள் தமது முயற்சியில் வெற்றி கண்டன. அதனால் ஒன்றும் அறியாத அப்பாவித் தமிழ். முஸ்லிம் மக்கள் உயிர், உடைமைகளை இழந்து நிர்க்கதிக்கு ஆளாகினர்.

அதனை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு இம்முறை துரிதமாகச் செயல்பட வேண்டிய பொறுப்பு இரு சமூகங்களைச் சேர்ந்த தலைவர்களையும் சார்ந்ததாகும்.

மட்டக்களப்பில் மட்டுமன்றி கிழக்கு இலங்கை முழுவதிலும் தமிழ், முஸ்லிம் மக்கள் அருகருகே அடுத்துத் தொடுத்து வாழ்ந்து வருகிறார்கள் அவரவர் தனித்துவத்தை இழக்காமல் ஒன்றாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கிறார்கள். வெளியார் ஒருவர் பார்க்கும் போது இவர் தமிழரா அல்லது முஸ்லிமா என்று சந்தேகப்படும் அளவுக்கு அவர்களுக்கு இடையே ஒற்றுமையும் நல்லுறவும், ஒட்டுறவும் உண்டு

இதனை சில தீய சக்திகளால் பொறுக்க முடியவில்லை. சமயத்தால் மட்டுமே வித்தியாசப்பட்டு நிற்கும் இரு சமூகத்தவர்கள் மத்தியில் பகைமை என்ற விஷ விதையை விதைத்து தாம் இலாபம் தேடிக்கொள்ளப் பார்க்கின்றன அவை

அந்தச் சுயநலமிகளின் வலைக்குள் விழும் ஒரு சில வேண்டாத பேர்வழிகள் இரு தரப்புகளிலும் இருக்கிறார்கள். அதுவே தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைக்குப் பெரும் சாபக்கேடாகிவிட்டது.

இரு சமூகங்களிலும் உள்ள புல்லுருவிகளை கண்டுபிடித்து அவர்களுக்கு அந்தந்தச் சமூக மக்களே தண்டனை வழங்கியாக வேண்டும். அந்தப் புல்லுருவிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்துப் பாடம் படிப்பிக்க வேண்டும்.

இதற்கு இரு சமூகத் தலைவர்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் கூட்டாகச் செயற்படுவது பிரதானம்.

ஆள் கடத்தலாக ஆரம்பித்துள்ள கலகத்தின் தொடக்கத்தைத் தடுக்க இரு சமூகத் தலைவர்களும் எடுத்து வரும் முயற்சி பாராட்டத்தக்கது அந்த முயற்சி வெற்றி அளிக்க வேண்டும் என்பதே எமது விருப்பமும், பிரார்த்தனையுமாகும்.

தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையையும், நல்லுறவையும் பேணுவதில் இருதரப்புகளைச் சேர்ந்த இளைஞர்களினது பங்கும். பண்பும் அவசியம். மூன்றாவது சக்தி தமக்குள் ஊடுருவி இரு தரப்பு உறவைக் குலைக்கும் முயற்சிகளுக்கு இளைஞர்கள் உடந்தையாகி விடக்கூடாது.

இளைஞர்கள் உணர்ச்சி வயப்பட்ட வயதினர். அவர்களைத் தமது வலைக்குள் வீழ்த்திக் காரியத்தைச் சாதிக்க தீயசக்திகள் முனையும். அதற்கு அவர்கள் இடம் கொடுக்கக்கூடாது.

காலாகாலமாக வளர்ந்து வரும் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை மேன்மேலும் வளர்ப்பதற்கு இரு தரப்பு இளைஞர்களும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். அதுவே இரு சமூக மக்களுக்கும் நன்மை தரும்.

தமிழ் - முஸ்லிம் இளைஞர்கள் இதனை நன்கு உணர்ந்து செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணவே இந்திரா விரும்பினர்

## ஒற்றையாட்சி அமைப்புக்குள் அல்ல
## இந்து நாளிதழுக்கு சிவா பேட்டி

உண்மையான அதிகாரப் பரவலாக்கல் பற்றி கோரிக்கை முன் வைக்கப்பட்டவுடன் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பூதத்தைக் கிளப்புகிறார் திரு. ஜெயவர்த்தன. தனிநாட்டுக் கோரிக்கையை மனத்தில் வைத்து தனக்குத் தானே. திரு. ஜெயவர்த்தன ஏற்படுத்திய நிர்ப்பந்தம்தான் சர்வஜன வாக்கெடுப்பு.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கூறுகிறார்.

'இந்து' நாளிதழில் வெளிவந்த இவரின் கட்டுரையின் இன்னொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.

14. 12. 1984 இல் நடந்த சர்வகட்சி மாநாட்டில் ஜனதிபதி ஜெயவர்த்தன சமர்ப்பித்த நகல் சட்டம்' மாநில சுயாட்சிக்கு தொலைவில் இருந்தது அதிகாரப்பரவலாக்கல் சம்பந்தமாக ஒரு ஒழுங்கான திட்டமாவது அந்த நகல் சட்டத்தில் காணப்படவே இல்லை.

சர்வகட்சி மாநாட்டில் 'அ' குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட விஷயங்கள், சில அமைச்சர்களின் கடமைகளே.

14 12. 84 இல் சர்வகட்சி மாநாடு கூடி 21 12 84க்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் தூதுக்குழுக்களின் கருத்துக்கள் வெளியிடப்படும் என்றும் கூறப்பட்டது.

அரசின் நகல் சட்டம் குறித்து பூரண அதிருப்தி தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணி தயாரித்தது.

21.12 84 இல் அறிவிக்கப்பட்ட படி சர்வகட்சி மாநாடு கூடியது. உடனே திரு. ஜெயவர்த்தன எழுந்து, சர்வகட்சி மாநாடு முடிவுற்றது என்று அறிவித்தார். தொடர்ந்து நடைபெறுவதால் பிரயோசனம் எதுவும் விளையாது என்றும் ஜனதிபதி அச்சமயம் குறிப்பிட்டார்.

சர்வகட்சி மாநாடு தொடர்ந்து நடைபெற்று இருந்தால் நகல் சட்டம் பற்றிய கூட்டணியின் கருத்து வெளியிடப்பட்டிருக்கும்.

திடீரென்று மாநாடு முடிவடைந்ததும், நகல் சட்டத்தை அரசாங்கம் பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டதும் காரணமாக கூட்டணியும் தனது அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டது.

இவற்றின் அடிப்படையில் பார்த்தால் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மீது திரு. ஜெயவர்த்தன குற்றஞ்சாட்டுவது தவறானது

மாநில சுயாட்சியை வழங்குவதற்கு தன்னால் உருவாக்கப்பட்ட 1978 அரசமைப்புச் சட்டம் தான் முட்டுக்கட்டையாக இருப்பதாக திரு. ஜெயவர்த்தன அடிக்கடி காரணம் கூறுகிறார்.

உண்மையான அதிகாரப் பரவலாக்கல் பற்றி கோரிக்கைகள் வைக்கப்பட்டவுடன் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பூதத்தை திரு ஜெயவர்த்தன எழுப்புகிறார். சர்வஜன வாக்கெடுப்பு ஒற்றையாட்சி அரசமைப்பு— இவை எல்லாம் எமது தனிநாட்டுக் கோரிக்கை மனதில் வைத்தே திரு. ஜெயவர்த்தன தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட முட்டுக்கட்டைகள்

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து திருமதி இந்திராகாந்தி மிக அவதானமாகப் பேசினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஐக்கிய இலங்கைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதுதான் அன்னை இந்திராவின் கருத்து.

ஒற்றை ஆட்சி அரசமைப்புக்குட்பட்டதாக தீர்வு இருக்க வேண்டும் என்று அன்னை இந்திரா எக்கட்டத்திலும் கூறவே இல்லை

எப்படி இருந்தாலும் ஒற்றையாட்சி அரசமைப்பு உருவாக்கப்பட்டதற்கு தமிழர் பொறுப்பல்ல.

அரசமைப்புச் சட்டத்தை விட்டு, சுதந்திரமான முறையில் மாநில சுயாட்சி பற்றி கருத்துத் தெரிவிக்க இலங்கை அரசு ஏன் தொடர்ந்து மறுத்து வருகிறது?

இக்கேள்விக்குப்பதில் தெரிந்து விட்டால், ஒரு அரசியல் திட்டத்தையும் அதற்கான சட்டத்தையும் உருவாக்குவது இயலுமான காரியமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது மாற்று யோசனைகளை இலங்கை அரசுக்கு, இந்திய அரசு ஊடாகச் சமர்ப்பித்துள்ளது.

இந்த யோசனைகள் மிகவும் நியாயமானவை என்று விஷயமறிந்த அரசியல் அபிப்பிராயங்கள் மூலம் தெரியவருகிறது.

இந்தியாவிலும் மற்ற உலக நாடுகளிலும் அரசியல் அபிப்பிராயங்கள் கூட்டணியின் யோசனைகளுக்குச் சாதகமாக உள்ளன.

எமது யோசனைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டால், பெரும்பாலான தமிழர்கள் இதற்குச்சம்மதிப்பர் என்ற நம்பிக்கை கூட்டணிக்கு உண்டு.

இலங்கை அரசு இந்தச் சவாலை ஏற்குமா? அல்லது பல்வேறு காரணங்களைக் கூறி, அவற்றிற்குப் பின்னால் ஒளிந்து கொள்ளுமா?

(தொடரும்)



**பொய்யாமொழி**

குறள்:
கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்.

பொருள்:
முன் உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாராலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.

# சங்கிலியன் புனர் வாழ்வு

## கழக அகதிகளுக்கு தற்காலிக குடியிருப்பு

### மக்கள் ஆலோசனை பெறப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 25

நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ள தமிழ் அகதிகளுக்கு தற்காலிக குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்க சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது

இது சம்பந்தமான ஆலோசனைகளைப் பொது மக்களிடம் இருந்து எதிர்பார்ப்பதாக நல்லூர்— பருத்தித்துறை வீதியில் உள்ள சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு;

எமது கழகம் 22-10-85 தொடக்கம் இன்றுவரை 166 குடும்பங்களைச் சேர்ந்த 673 பேரைப் பராமரித்து வந்தது இவர்களில் தற்பொழுது 95 குடும்பங்களைச்சேர்ந்த 380 பேர் இன்னும் இருக்கின்றார்கள்.

இவர்களில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 368 பேர் திருகோணமலையையும் அதனைச் சார்ந்துள்ள பன்குளம், மூதூர், கிண்ணியா, சாம்பல் தீவு போன்ற இடங்களையும் சேர்ந்தவர்கள் மிகுதியானோர் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, ஹட்டன் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரும் தங்களது வீடுகள், சொத்துக்கள், உடைமைகள் போன்றவற்றை இழந்து வந்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் நாம் எமது மக்களின் துணையுடன் பராமரித்து வருகிறோம்.

ஆனால் இவர்களை நாம் தொடர்ந்து பராமரித்து வருவதால் இவர்களை இவர்களது சொந்தக் காலில் நிற்கவிடாத குற்றத்துக்கு ஆளாகின்றோம்

அகவே தான் இவர்களுக்கு இவர்களது சொந்த இடத்துப் பிரச்சினைகள் தீரும் வரை ஒரு தற்காலிக குடியிருப்பு வசதியை ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகின்றோம்.

அத்துடன் அதற்குரிய காணியை எடுக்கும் விடயத்தில் ஓர் அளவு வெற்றி கண்டுள்ளோம்.

அது மட்டுமல்ல நாங்கள் இவர்களுக்கு அமைத்துக் கொடுக்கவிருக்கும் குடியிருப்புச்சம்பந்தமான அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் என்பவற்றை பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

உங்களது சகல அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் யாவையும் எழுத்து மூலம் தந்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## ஒழுக்கம் வளர இந்துநாகரிக கண்காட்சி

### கல்விப்பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், மார்ச், 25

ஒழுக்கமும் நற்பழக்கமும் வளர்வதற்குமாணவ உலகுக்கு இந்து நாகரிகக் கண்காட்சி நிச்சயம்துணை புரியும் இது போன்ற கண்காட்சி மிகப்பெரிய அளவில் நடத்துவதால் கல்வித்துறை மேம்பாடு அடையும்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடந்த புதன்கிழமை 'இந்து நாகரிகக் கண்காட்சி' ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இந்த இதயம் கவர்ந்த இந்து நாகரிகக்கண்காட்சியைத் திறந்து வைப்பதில் நான் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த வாய்ப்பை எனக்களித்த அதிபர் செல்வி இராமநாதன் அவர்களுக்கு என்நன்றி என்றார்.

விழாவில் திருமதி. ஜெகநாதன் நன்றியுரை கூறினார் மாணவிகளின் நடன, இசை நிகழ்ச்சியும் இறுதியில் இடம் பெற்றன.

### நீர்வேலியில் கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், மார்ச்.25

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலில் வருடாவருடம் நடைபெற்று வந்த கணபதி ஹோமமும் பெரிய புராணபடன பூர்த்தி விழாவும் இவ்வருடம் பங்குனி உத்தர தினமான இன்று செவ்வாய்க்கிழமைநடைபெறவுள்ளது.

இன்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

ஒழுங்குகளை ஆலய வழிபடுவோர் சபையும், திருப்பணிச் சபையும் செய்து வருகின்றன

### தீவுப் பகுதி போக்குவரத்து நலன்புரிச் சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச்25

தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சேவைத் தொழிலாளர் நலன்புரிச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: எஸ். பரராசசிங்கம், உபதலைவர்: எஸ் கங்காதரன், செயலாளர்: எம். அலெக்ஸாண்டர், பொருளாளர்: ஏ. அசோக்குமார், செயற்குழு: ஆர். இராஜகுமார், எஸ். அமிர்தலிங்கம், எப். ஏபிரகாம், கே. அப்புத்துரை, பி தேவதாஸன், வி. மோசெஸ், என். பாலசுப்பிரமணியம்.

### கரவெட்டியில் கும்பாபிஷேகம்

கரவெட்டி, மார்ச் 25

கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தினத்தை ஒட்டி எதிர்வரும் புதன் கிழமை காலை 8·00 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகும் பகல் 12 மணிக்கு [illegible] நடைபெறும்.

### நெடுங்கேணியில்

## 10பிள்ளைகளின் தந்தை ஒருவரின் அனுபவம்

நல்லூர், மார்ச்.25

நெடுங்கேணி சம்பவத்தில் காயமடைந்தவர்களில் பெரியசாமி மாணிக்கமும் (62 வயது) ஒருவர். இவர் பத்துக் குழந்தைகளுக்குத் தந்தை.

தனது அனுபவத்தை பின்வருமாறு கூறுகிறார்:

சம்பவ தினம் பெரிய குளத்தில் இருந்து டவுன் பக்கமாக ஏராளமான வெடிச் சத்தங்கள் கேட்டன.

நானும் எனது மனைவியும் பயத்தினால் பண்டாரக்குளப் பக்கம் ஓடிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது "டேய் நில்லடா ஓடாதே" என்று சத்தம் கேட்டது.

நானும் மனைவியும் நிற்கவில்லை ஓடிக்கொண்டிருந்தோம்.

இடையில் அகப்பட்ட கம்பி வேலியை தாண்டி குதிக்க முற்பட்ட பொழுது சூடு எனது கையைத் தாக்கியது.

இரத்தம் ஓட ஓட அருகில் இருந்த ஆற்றுக்குச் சென்று படுத்துக்கொண்டோம்.

சுமார் இரண்டுமணித்தியாலங்கள் தண்ணீரில் படுத்திருந்த நாம் பின்னர் எழுந்து வீட்டுக்குச் சென்றோம்.

இப்படி இவர் சொன்னார்.

[illegible] வேலை செய்து வருபவர் இவர்.

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை நிபுணர்

பருத்தித்துறை மார்ச் 25

மந்திகை ஆதார ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்க யாழ் சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு கே. கனகசபை நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ் கணேசநாதன் தலைமையில் மந்திகை ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் அத்தியட்சகரைச் சந்தித்து ஆஸ்பத்திரியின் குறைகளைத் தெரிவித்தனர்.

பணி புரிந்து வந்த சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ், ஜெயப் பிரகாசம் ராஜினுமாச் செய்து விட்டு வெளிநாடு சென்று விட்டார்.

அதன் பின்னர் வன்செயல்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது-

இப்படி அத்தியட்சகரிடம் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரிக்குத் தேவையான சிற்றூழியர்களை மாதஇறுதிக்குள் அனுப்பி வைப்பதாக அத்தியட்சகர் உறுதியளித்தார்.

மற்றும் பல குறைபாடுகளை நீக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அத்தியட்சகர் உறுதி அளித்தார்.

### வியாழக்கிழமை நடைபெற இருக்கும்

## தீவட்டி ஊர்வலம் குறித்து அ. தி. மு. க. அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 25

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தீவெட்டி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட இருக்கிறது.

'என் உடன் பிறப்புகளான இரத்தத்தின் இரத்தங்களோடு இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் போராட்டம் பற்றி சில நிமிட நேரங்கள் என்ற தலைப்பில் அண்ணா தி.மு க. வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய எமது தமிழ மண் பறித்து எடுக்கப்படுகிறது திருமலையில் இராணுவ தர்பார், மட்டக்களப்பில் அதிரடிப்படை அநியாயம், நயினாதீவில், கடற்படைக் கொடுமை, மன்னாரில் அரச படைகளின் அத்து மீறல், மூதூரில் முஸ்லிம் விவசாயிகள் கொலை. தங்கவேலாயுதபுரத்தில் 103 பச்சை தமிழர்கள் படுகொலை, பரந்தனில் பதைக்க பதைக்க பாதசாரிகள் பத்து பேர் பயங்கரமான முறையில் படுகொலை,

ஆட்சியாளர்களுக்கு கொலை வெறி பிடித்து தனது ஏவல் படைகளை கொண்டு கொன்று குவிக்கும் படுபாதகமான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு இருக்கின்றனர். தமிழினத்தை அழிப்பதில் அரசின்படைகள் போட்டி போடுகின்றன.

மனித உரிமை மீறல்களுக்கு இன்று உலக அரங்கில் ஸ்ரீலங்கா தலைமை தாங்கின்ற நிலையில் இருக்கிறது.

தமிழினத்தின் நீண்டகால பிரச்சினைகள் இன்று விஸ்வரூபம் எடுத்து தமிழினத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க கூடியதான் அமைவுகள் நீண்டு செரண்டு போகின்றன

சிங்கள அரசியல் வாதிகளோ! புத்தனின் போதனையைபரப்புகின்றபுத்த பிக்குகளோ! தமிழினத்தின் நியாயமான தீர்வுகளை அங்கீகரிக்கக்கூடியவர்களாகத் தெரியவில்லை.

இஸ்ரவேலின் மொசாட் தந்திரமும் பாகிஸ்தான் பயிற்சியும் உற்சாகமும் அரசின் ஆணவ போக்கினை கூட்டிக்கொண்டு இருக்கிறது.

இந்தியாவில் பாரதத்தின் நல் எண்ண முயற்சியையும் ஆணவ போக்கினால் தூக்கி எறிந்து பேசக் கூடிய நிலையில் இருக்கிறார்கள்

அழிவு அவர்களுக்கு நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

அண்ணா தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. பொன் மதிமுகராஜா அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### ஊரெழுவில் இணக்க சபை

யாழ்ப்பாணம், மார்ச்·25

ஊரெழு இணக்கசபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மக்களிடையேஏற்படும் பிணக்குகள், பிரச்சினைகள் முதலியவற்றை தீர்வத்துடன் மூலம் நீதிக்கும் சமாதானத்துக்கும் உழைப்பதுடன் அவர்களிடையே அமைதியையும் ஒற்றுமையையும் பேணுவது இச்சபையின் நோக்கமாகும்.

15 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையின் செயலாளராக சட்டத்தரணி க. சிவசுப்பிரமணியம் பணிபுரிகின்றார். இணக்க சபை உறுப்பினர்கள் வருமாறு;

மூ வீரசிங்கம், ப. இராசேந்திரம், க. கனகசுந்தரம், இ. கிருஷ்ண பிள்ளை, பி ஏமான், ப. கணேஷ், சு சபாரத்தினம் ஐ வைரமுத்து. க. வை. தனேஸ்வரன், நா. இராசையா, நா. குகநாதன், க. சற்குணராசா, எஸ் பாலசுப்பிரமணியம்.

### நவஜீவனம் சிறுவர் பாடசாலை

பரந்தன், மார்ச். 24

முரசுமோட்டை நவஜீவனம் சிறுவர் பாடசாலையை மேலும் வளர்ச்சி காணச் செய்யும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று சென்றவாரம் நடைபெற்றது.

திருமதி வனதம்பிராஜா அம்மையார் தலைமையில் நவஜீவன மண்டபத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது

சிறுவர் பாடசாலையின் ஆசிரியைகளும் பெற்றோர்களும் இதில் கலந்து கொண்டனர்.

சிறுவர்களின் நலமேம்பாட்டிற்கும் உளவிருத்திக்குமான விடயங்கள் அங்கு ஆராயப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகலிங்கம் இன்ஸ்டிடியூட்
நாவலடி லேன், திருநெல்வேலி.
A/L 88 Batch ஆரம்பம் ஏப்ரல் 1 முதல்
பௌதிகம் - பத்மநாதன் B.Sc. (Hons)
இரசாயனம் - மகாதேவா B.Sc. (Hons)
தாவரவியல் - வைலீசிங்கம் B.Sc. (Hons)
விலங்கியல் - ஸ்ரீகரன் B.Sc. (Hons)
தூய/பிரயோக கணிதம் - குணலிங்கம் B.Sc (Hons)
நேருசிலை கல்வி நிலையத்தில் பெறவும்

# உதயன்

25. 03. 1986 செவ்வாய்க்கிழமை

நாகலிங்கம் இன்ஸ்டிடியூட்
நாவலடி லேன், திருநெல்வேலி
பௌதிகம் - பத்மநாதன் B.Sc. (Hons)
A/L 86 - ஒலியியல் மார்ச் 29 முதல்
A/L 87 - வெப்பவியல் ஏப்ரல் 5 முதல்
A/L 88 - அளவீடுகள் ஏப்ரல் 5 முதல்
A/L 88 - இரசாயனம்
அசேதன இரசாயனம் மார்ச் 26 முதல்.

## வித்தாரம்

என்ன முரளியார் முழிசிக் கொண்டு வாறீர்! ஏதாவது அபசகுனமாய்ப் போச்சோ அல்லது ஆபத்திலை மாட்டிக் கொண்டீரோ?

அட, அடே, நேற்றைக்குப் பண்ணைப் பக்கம் போனபோது உண்டான திகைப்பு இன்னும் மாறவில்லை எண்டு சொல்லு.

ஓ அவை, இராமண்ணைமார் எப்பிடியும் கோட்டையுக்குளாலை வெளிக்கிட்டுத் திரியத்தான் நிக்கினம். நெடுகலும் அதுக்குள்ளை அடைபட்டுக் கிடக்க அவைக்கும் அலுப்புப் பிடிக்குதாக்கும்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு பகுதியளிலை அவை வலு சுதந்திரமா நடமாடுகினம். இஞ்சை கொஞ்சம் கஷ்டமாயிருக்கு எண்டு யோசிப்பினம் தானே. சரி அந்த விஷயத்தை விடு.

* * *

மட்டக்களப்பிலை முஸ்லிம், தமிழ் குழப்பம் எண்டு கேள்விப்பட்டிருப்பாய்.

இதெல்லாம் மூண்டாம் பேர்வழியின்ரை வேலை எண்டுதான் நினைக்கவேண்டி இருக்குது. அவை உருக்குலைத்துவிட இரண்டு பக்கத்தாலை இருக்கிற சில சந்தர்ப்பவாதியள் அதுக்குத் துணை போகினம்.

ஆனால் அப்பிடி மேலை முதந்த வாரியா சொன்னால் மட்டும் போதாது. உந்த விவகாரம் மெத்த ஆழமானதடா தம்பி.

* * *

இனப்பிரச்சினை எண்டால் இப்போதைக்குத் தீராத விஷயம் அப்பிடி எண்டு புதுஅகராதி எழுத வேணும் போலை இருக்கு.

தனிநாடு இல்லை எண்டது அரசாங்கத்தின்ரை நிலை. சரி அதைக் குடுக்க முடியாதெண்டா மாநில சுயாட்சியைக் குடுக்கலாம் தானே எண்டு வெளிநாடுகள் கேட்காமல் பண்ண வேணும் எண்டது அரசாங்கத்தின்ரை நோக்கம்.

வடக்கையும் கிழக்கையும் இணைச்சுக் குடுக்க முடியாது. கிழக்கு மக்களுக்கு அதுக்கு விருப்பமில்லை எண்டு இவ்வளவு நாளும் சொல்லி வந்திச்சினம்.

ஆனால் கிழக்கிலை வாழுற முஸ்லிம்கள் மாநில சுயாட்சிக்குக் குந்தகமாய் இருக்கமாட்டினம் எண்டநிலை இப்ப கொஞ்சம் உருவாகி வருகுது.

அந்தநிலையைஉடைச்சு விடவேணும் எண்டு அரசாங்கம் நினைக்கலாம் எல்லே!

அதுக்கு ஒரு வழியையும் அது கண்டுபிடிச்சிருக்குது எண்டு ஊகிக்க வேண்டி இருக்கு

இனப் பிரச்சினைக்கு உருப்படியா ஒரு தீர்வைக் காணுறதுக்கு முன்னம், முந்திரிக்கொட்டை மாதிரி கிழக்கிலை மாகாண சபைத் தேர்தலை நடத்துறது அதுக்கு அந்தப் பகுதி மக்கள் ஆதரவா இருக்கினம். இணைப்புக்கு ஆதரவில்லை எண்டு வெளிஉலகுக்குக் காட்டலாம் எண்டதுதான் அரசாங்கத்தின்ரை எண்ணமாம். இதை நான் சொல்லயில்லை. கொழும்பிலை அரசியல் வட்டாரங்கள் பேசிக்கொள்கின்றன.

எது எப்பிடியோ, இனப் பிரச்சினை விஷயத்தைக் குழப்பி அடிச்சு ஒண்டும் விளங்காத மயக்க நிலைக்குக் கொண்டுவந்திட்டால், அதிலை வெற்றி எண்ட ஒரு நினைப்பும் சில முக்கிய புள்ளிகளுக்கு இருக்கலாம் ஆருக்குத் தெரியுமப்பா உந்தச் சூட்சுமங்கள் எல்லாத்தையும்.

திண்ணவேடி

எழுவைதீவுப் படகுகள்

# காவலூரில் இறங்குதுறையை பயன்படுத்தக் கூடாது

## கடற்படை அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

எழுவைதீவில் இருந்து புறப்படும் தனியார் படகுகள் எக்காரணம் கொண்டும் ஊர்காவற்றுறை(காவலூர்)இறங்குதுறையைப் பயன்படுத்தக் கூடாது.

இப்படி காரைநகர்க் கடற்படை முகாம் பொறுப்பு அதிகாரி கமாண்டர் எச். எம். இயூ விக்ரமரத்தின அறிவித்தார்.

நேற்று காரைநகர் கடற்படை முகாமில் பிரஜைகள் குழுக்களின் தூதுக் குழுக்களுடன் நடந்த சந்திப்பில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. என் நாகராசா, அனலைதீவு பிரஜைகள் குழுத்தலைவர் திரு. வி. சிவராஜா, காரைநகர் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு சி. நவரத்தினம் தலைமையில் தூதுக்குழுக்கள் சந்திப்பில் கலந்துகொண்டன.

யாழ் செயலக உதவி அரசாங்க அதிபரும் பொதுசன தொடர்பு அதிகாரியுமான திரு. க. குலசேகரமும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எம். எப் ரூபசிங்கா தலைமையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

தடைப்பட்டுள்ள படகு பிரயாணச் சேவை காரணமாக தீவுப் பகுதி மக்களின் கல்வி, வைத்திய, பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரஜைகள் குழுக்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முறையிட்டன

அதைத் தொடர்ந்து, மாகாண வீதி அதிகார சபை உயர் அதிகாரி திரு. எம். வி. இலநாயகத்தின் அனுசரணையுடன் அரச பிரயாண படகுச் சேவைக்கான நேர சூசி தயாரிக்கப்பட்டது

நேர சூசி அட்டவணை முன்பக்கத்தில் தனிச் செய்தியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளி விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த வடமாகாண ஆசிரிய சங்க சகாயநிதியின் வெள்ளிவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சகாயநிதியின் செயலாளர் திரு. இ. மகேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

## வல்வெட்டித்துறை ரதோற்சவம்

வல்வெட்டித்துறை, மார்ச் 5

வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் (சிவன்) கோயிலில் இன்று செவ்வாய்க்கிழமை ரதோற்சவம் நடைபெறுகிறது.

நாளை புதன்கிழமை வல்வை ஊறணி சமுத்திர தீரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

## பத்திரகாளி தேர்த்திருவிழா

வட்டுக்கோட்டை, மார்ச் 25

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

அம்பிகை இன்று பிற்பகல் 3 மணியளவில் சித்திரத் தேர் ஏறி அடியார்களுக்கு காட்சி கொடுப்பாள்

## ஆரையம்பதி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த சமயம் அவரை துப்பாக்கிக்குண்டு தாக்கியது.

ஞானகாந்தன் என்ற பெயருடைய அந்த நபர் நெற்றியில் ஏற்பட்ட சூட்டுக்காயத்துடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் பின்னர் ஆபத்தான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டார்.

### பஸ் சேவை பாதிப்பு

நேற்றுக்காலை 5-30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து பொத்துவில் நோக்கிப் புறப்பட்ட பஸ் வழி மறிக்கப்பட்டது.

தமிழ் பயணிகள் தாக்கப்பட்டனர். அவர்களின் உடைமைகள் பறிக்கப்பட்டன. பொத்துவில் செல்லாது பஸ் மீண்டும் மட்டக்களப்புக்கே திரும்பியது.

இச்சம்பவம் காரணமாக நேற்று நண்பகல் வரை பஸ்சேவை இடம் பெறவில்லை. பிற்பகல் 1-30 மணிக்குப் பின்னர் பொலீஸ் பாதுகாப்புடன் ஓரிரு பஸ் சேவைகள் நடந்தன.

கடைகள் மூடப்பட்டன, அரச ஊழியர், மாணவர் வருகை குறைந்து காணப்பட்டது

கடத்தப்பட்ட தமிழர், முஸ்லிம்களை விடுவிக்கும் பணியில் மதப்பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளனர். கடத்தப்பட்ட முஸ்லிம்களை விடுவிக்க ஞாயிறு வழங்கப்பட்ட 48 மணித்தியால காலக்கெடு இன்று செவ்வாய் மாலை 6-30 மணியுடன் முடிவடைகிறது.

பதற்ற நிலையைக் கேள்விப்பட்டு மட்டக்களப்பு 2 ஆவது எம். பி. ஜனாப் ரிஸ்வி சின்னலெப்பை மட்டக்களப்புக்குத் திரும்பினார். இன்று (செவ்வாய்) காத்தான்குடி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் மட்டுநகர் அரச அதிபர் திரு. எம் அந்தோனிமுத்து தலைமையில் சமரசமாநாடு ஒன்று நடைபெறுகிறது.

2 ஆவதுஎம். பி ஜனாப் ரிஸ்வி சின்னலெப்பையும் கலந்து கொள்கிறார்.

இதனிடையில் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த பிரசுரங்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

★ அவசரகாலச் சட்டத்தை நீக்கு!
★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்!

# 21 தொழிற்சங்கங்கள் இன்று கொழும்பில் மாநாடு

கொழும்பு, மார்ச் 25

- அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டும்.
- இனப்பிரச்சினைக்கு உடனடியாக சுமுக தீர்வு காணப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்துமுகமாக 21 தொழிற் சங்கங்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) முழுநாள் மாநாடுஒன்றை கொழும்பில் நடத்துகின்றன

காலை 10 மணியில் இருந்து மாலை 6 மணி வரை நடைபெறும் இம் மாநாட்டில் ஐ. தே. க, இ. தொ. கா. ஆதரவிலான தொழிற் சங்கங்கள் தவிர்ந்த ஏனைய தொழிற் சங்கங்கள் கலந்துகொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகததாச விளையாட்டு அரங்கில் இந்த ஒருநாள் மாநாடு நடைபெறும்

## நாவற்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சேதம்பற்றி விவரம் அறிய முடியவில்லை.

முகாமை அடைந்த சிப்பாய்கள் ஷெல் தாக்குதலில் ஈடுபட்டனர். நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திலுள்ள மூன்று வீடுகள் ஷெல் தாக்குதலால் சேதமடைந்தன.

முகாமிலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஞானபிரகாசம் என்பவரின் வீட்டு வேலி அடியில் ஷெல் விழுந்து வெடித்ததால் ஆழமான குழி ஏற்பட்டதுடன் வேலியும் சேதம் அடைந்தது.

இதிலிருந்து வெடித்துச் சிதறிய குண்டுகளால் அண்மையிலிருந்த கந்தையா குமாரசாமி என்பவரின் வீட்டுச் சுவரில் துளைகள் ஏற்பட்டன.

ஷெல் தாக்குதலுக்குப் பயந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். சிலர் கைதடிப் பகுதிக்கு வந்து அகதிகளாகத் தங்கி உள்ளனர்

இச்சம்பவத்தினால் நாவற்குழி கிளாஸ் பக்டரியில் வேலை செய்யும் ஊழியரான சுப்பையா கணபதிப்பிள்ளை (74 வயது) என்பவர் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

## இலங்கையுடன் . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து 15 நிமிடங்கள் உரையாடினார்.

திரு திலகரட்ண தெரிவித்தவற்றை, திரு. ராஜீவ் காந்தி வெறுமனே கேட்டுக் கொண்டிருந்தாரே தவிர, குறுக்கிட்டு விளக்கம் எதுவும் கேட்காமல் மௌனமாக இருந்தார் — இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறின

இந்த நிலையில் இலங்கை அரசு வழிக்கு வரும் வரை இலங்கையுடன் தொடர்பு அற்ற' நிலையைக் கடைப்பிடிக்க இந்திய அரசு தரப்பினர் தீர்மானித்து இருப்பதாகத் தெரிகின்றது.

இதனிடையில 'புரொடெக்' ஸ்தாபனத் தலைவரான திரு. எஸ் ஸி. சந்திரகாசன், திரு. எம். கே ஈழவேந்தன் ஆகியோர் புதுடில்லியில் இருந்து அரசியல் தலைவர்களையும் எதிர்க்கட்சிப் பிரமுகர்களையும் சந்தித்து வருகின்றனர்.

இனக் கொலைக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தமிழினத்தைக் காப்பாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர்களை இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## தமிழரைக் கொல்வதை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தும் வரை பேச்சுக்களை நடத்த முடியாது.

படுகொலைகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இதனால் உலகில் இலங்கை தனிமைப்படுத்தப்படும் நிலை உருவாகி வருகிறது

அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். அப்போதுதான் அரசியல் தீர்வு ஒன்றைக் காணக்கூடிய சாதகமான சூழ்நிலை உருவாகும்.

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகள், அப்பாவித் தமிழரைக் கொல்வதை நிறுத்த வேண்டும். யுத்த நிறுத்தத்தை இரண்டு பக்கத்தினரும் கடைப்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்

தமிழ் மக்களைக் கொலை செய்வதை நிறுத்தும் வரை பேச்சுவார்த்தை எதுவும் நடக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் தமிழர்களுடன் நேரடியாகப் பேசுவதற்குத் தயாராக வேண்டும்.

இஸ்ரவேல், தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் கூலிப்படைகளை மறைமுகமாக அமர்த்தியதன் மூலம் இலங்கை நிலைமையை மேலும் சிக்கலாக்கி உள்ளது.

எனினும் இலங்கையுடனான இந்தியாவின் உறவு நல்ல நிலைமையில் உள்ளது.

இல்லாவிட்டால் இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் உதவியை மீண்டும் இலங்கை நாடுமா?

இப்படி திரு பலிராம் பகத் சொன்னார்.

விவாதத்தில் கலந்து கொண்ட எம். பிக்கள் பேசுகையில் சொன்னதாவது;

இனப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா புது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை,பாகிஸ்தான் நாடுகளுக்கு வல்லரசுகள் மறைமுகமாக உதவி அளித்து வருவதால் அவை உலகப் பிரச்சினையாக மாறிவிட்டன.

இனப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படாவிட்டால் இலங்கையின் தமிழினமே அழிந்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது'' — இப்படி எம் பிக்கள் கூறினர்.

## எழுத்தாளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொள்கிறோம்.

ஈழத்தின் மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான திரு. டானியல் இரண்டு தடவைகள் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றவர்.

'உலகங்கள் வெல்லப்படுகின்றன' என்ற சிறுகதைத் தொகுதிக்கும் 'பஞ்சமர்' என்ற நாவலுக்கும் சாஹித்திய பரிசுகள் கிடைத்தன.

பல நாவல்களை அவர் எழுதியிருந்த போதிலும் எட்டு நாவல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் திரு டானியல் வெளியிட்டிருந்தார்.

அறுபது வயதினரான திரு. டானியல் மருத்துவ சிகிச்சைக்காக அண்மையில் இந்தியா சென்றிருந்தார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகவே அவர் தமது பேனாவின் சக்தியைப் பயன்படுத்தி வந்தார்.

## சந்நிதி . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டனவாம். அதைத் தொடர்ந்து மணியை அடித்து, ஆள் திரட்டி சடலங்களை அகற்றும் வேலை கைவிடப்பட்டது. ஆலய பூஜைகளை மீண்டும் ஆரம்பிக்கவும் முடியவில்லை.

இந்நிலைபற்றி யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கத்துக்கு முறையிடப்பட்டது.

பூசகர்கள், இணைப்பதிகாரியைச் சந்தித்து இது பற்றி நிவாரணம் காண திரு. பஞ்சலிங்கம் ஏற்பாடுகள் செய்துகொடுத்தார்.

அதன்படி இணைப்பதிகாரி – பூசகர் சந்திப்பு இன்று காலை பத்து மணிக்கு பலாலி முகாமில் இடம்பெறும்.

## விளையாட்டரங்கு

# யூனியன் அணி வெற்றி! கொக்குவில் இந்து சரிவு

### ஸ்ரீ, சதா அபாரத் துடுப்பாட்டம்

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண் ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 25

நேற்று முன்தினம் விறுவிறுப்பாக நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை, யூனியன் அணி 6 ஓட்டங்களால் தோற்கடித்தது.

யூனியன் அணியின் தலைவரும், உபதலைவரும் 6 ஆவது விக்கெட் ஜோடியாக இணைந்தாடிப்பெற்ற 129 ஓட்டங்களும்—

எதிரணியைத் திணறடித்த ஏ. பொன்வில்லியஸ், கே. அஜந்தன் ஆகியோரின் பந்து வீச்சும்—

யூனியன் அணியின் வெற்றிக்கு வித்திட்டன

யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்தஅணி 50 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களையும் இழந்து 207ஓட்டங்களைப் பெற்றது

அணித் தலைவர் எஸ். ஸ்ரீதரன் 12 பவுண்டரிகள் 1 சிக்சர் அடங்கிய 77 ஓட்டங்களையும் அணியின் உபதலைவர் எம். சதானந்தன் 10 பவுண்டரிகள் 2 சிக்சர்கள் உட்பட 76 ஓட்டங்களையும் விளாசி அடித்தனர்.

எஸ். துஷ்யந்தன் 39 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

யூனியனின் உச்ச எண்ணிக்கையான 207 ஓட்டங்களை எட்டிப் பிடிக்கும் நோக்கில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 48 3 ஓவர்களில் 201 ஓட்டங்களைப் பெற்றசகல விக்கெட்டுகளையும் இழந்தது.

வி மதிதரன் 42, ரி. மோகன் 34, எல். லோகன் 28, எம். ராஜ்மோகன் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஏ. பொன்வில்லியஸ் 36 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கே அஜந்தன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும்கைப்பற்றினர்.

## ஜொனியன்ஸ் வென்றது

### சளைக்காமல் ஆடிய பல்கலைக்கழக அணி

யாழ்ப்பாணம், மார்ச் 25

சனியன்றுநடைபெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

யாழ் பல்கலைக்கழக அணியை ஜொனியன்ஸ் அணி 20 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 39.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது.

வை. முரளிதரன் சிறப்பாக ஆடி 62 ஓட்டங்களையும் ரி கிருபைதிலகன், ஜி. எஸ். நேசகுமார் ஆகியோர் முறையே 42, 32 ஓட்டங்களையும் பெற்றனர்

ஆர் மகிந்தா, கே சாந்தகுமார், எஸ் சனகேந்திரன், கே. ஸ்ரீரங்கன் ஆகியோர் முறையே 3, 3, 2, 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதற்குப் பதிலளித்து சளைக்காமல் ஆடிய பல்கலைக்கழக அணியால் ஒதுக்கப்பட்ட 45 ஓவர்களில் வெற்றி பெறுவதற்கு தேவையான 208 ஓட்டங்களைப் பெறமுடியவில்லை

இந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது

ரி எஸ் வரதன் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும், ஆர் மகிந்த 32 ஓட்டங்களையும், எஸ். விக்னபாலன் 31 ஓட்டங்களையும், எம். எஸ். எல். மலானியஸ் 24 ஓட்டங்களையும், சாந்தகுமார் 22 ஓட்டங்களையும் பெற்றனர்

ஏ வாகீசன், வை. முரளிதரன், எம். நிகால், எஸ் டி. குலநாதன் ஆகியோர் முறையே 4, 2, 2,1 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## அரசியல் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

7. கரிகாலன்.

இடையில் மேலும் இருவர் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் வருமாறு;

1 திரு வெ. யோகேஸ்வரன்
2. திரு.வி பொன்னம்பலம்.

ஜனவரியில் கரிகாலன் சிசெல்ஸ் நாட்டுக்குச் சென்றுவிட்டார். திரு. வி. பொன்னம்பலம் கனடா சென்று விட்டார்.

காலியான அந்த 2 இடங்களுக்கும் தற்போது திரு அ. தங்கத்துரையும்திரு செ.ஈழத்துநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் குழுவில் இதைத் தவிர வேறு எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

## டில்லியில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

டில்லிப் பிரதிநிதியாக ஒருவரைத் தெரிவு செய்து நியமிக்கும் முயற்சியில் தற்சமயம் கூட்டணி ஈடுபட்டுள்ளது.

### விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட், சேவல் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு.வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: சீமாட்டி பான்சி, 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சீமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் றோட், மயிலங்காடு, சுன்னாகம்.

## நீத்தார் பட்டியல்

### கமலாதேவி காலமானார்

நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு திருமதி கந்தையா, திரு. திருமதி வைத்தியநாதன் ஆகியோரின் பேத்தியும் கணேசலிங்கம் (C. T. B கோண்டாவில்) சிரோன்மணி, அருமை மகள் கமலாதேவி (சர்வோதய நிலையப் பொறுப்பாளர், கிளிநொச்சி) காலமானார். இவர் சந்திராதேவி, சத்தியதேவி, இந்திராதேவி, ஜெயக்குமார் (நோர்வே), யசோதரகுமார், நிர்மலாதேவி, பாலகுமார் ஆகியோரின் சகோதரியும் கமலா (ஆசிரியர், நெடுந்தீவு மகாவித்தியாலயம்), மங்களேஸ்வரி (ஆசிரியர், யாழ். யோன் பொஸ்கோ), இராசமணி ஆகியோரின் பெருமகளுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இல 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து இன்று (25-03-1986) 2 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் பப்ளிகேஷன் லிமிட்டெட்,207 ,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 25-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ60/N/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org